மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : நான் முதலிலேயே சொல்லி விட்டேன். முதலிலேயே அருச்சுனு ஆற்றிலிருந்து நீர் கொண்டு வரும் ஒரு திட்டம் இருக்கிறது. புதிய திட்டத்திற்கான செலவையும் நிர்வாகத்தையுமே அந்த நகர சபையால் ஏற்றுக் கொள்ள முடியாது. ஆகவே, மேலும் ஒரு திட்டம் தேவையில்லை என்று சொல்லிவிட்டேன்.

Renovation Committee appointed for the Gangaikonda Cholapuram Temple.

* 231 Q.—THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state :

(*a*) whether it is a fact that the Renovation Committee appointed for the Gangaikonda Cholapuram Temple, Thanjavur district is not functioning ; and

(*b*) if so, the action taken thereon by the Government ?

கங்கை கொண்ட சோழபுரம் திருக்கோயிலுக்கு அமைக்கப்பட்ட திருப்பணிக்குழு.

மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சை மாவட்டத்திலுள்ள கங்கை கொண்ட சோழபுரம் திருக் கோயிலுக்கு அமைக்கப்பட்ட திருப்பணிக் குழு இயங்கவில்லை என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) உண்மையல்ல. அருள் மிகு கங்கை கொண்ட சோழபுரம் திருக்கோயில் தஞ்சை மாவட்டத்தில் இல்லை ; திருச்சி மாவட்டத்தில் இருக்கிறது.

(இ) இவ்வினா எழ இடமில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : துணைத் தலைவரவர்களே, இந்த மார்ச் திங்களிலே இந்த மன்றத்திலே நிதி அறிக்கையின் மீது முதலமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது, தஞ்சைக் கோயிலிலே இராஜராஜ சோழன் சிலையை வைப்பதற்காக நாம் மத்திய அரசிடம் அனுமதி கேட்டு, இல்லை என்று அவர்கள் சொல்லி, இப்போது அங்கே வராகி அம்மன் சிலையையும் அதற்கு ஒரு மண்டபமும் கட்டியிருக்கின்றார்கள் என்பதையும் நினைவு படுத்தினார்கள். அந்த இடத்தை நானும் போய்ப் பார்த்தேன். புதிதாக ஒரு மண்டபத்தைக் கட்டியிருக்கின்றார்கள். அதையும் நான் இப்போது நினைவு படுத்தி, இதுபோல மத்திய அரசு தமிழக அரசை,—ஆங்கிலத்திலே

1975 ஏப்ரல் 19]

"இன்சல்ட்" என்று சொல்லுவார்கள்—அவமதிக்கும் வகையிலே நடந்து கொண்டு போனால், இராஜ ராஜன் சிலையை பிரகதீஸ்வரர் ஆலயத்திலே கொண்டு போய் வைத்து, நம்முடைய ஆலயத்தில் ஆலயமாகக் கருதும் மகாபலிபுரம் போன்ற பகுதிகளையும் நம் அரசிடம் ஒப்படைக்க வேண்டுமென்று கோருவார்கள் என்று சொன்னார்கள். அவர்கள் பேசிய பிறகு, நம்முடைய திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள், அவர்கள் செய்ததுதான் சரி என்று சொல்லியதாகவும், இங்கேயும் திரு. பிரம்மானந்த ரெட்டி அவர்கள் வந்து நமது முதலமைச்சரைக் குற்றம் சாட்டியே சொல்லியிருக்கிறார்கள் என்றும் பத்திரிகையிலே பார்த்தோம். எந்த இடத்திலே சிலை வைக்கலாம் என்பதை ஆய்வு செய்வதற்காக ஒரு கமிட்டியைப் போடலாம் என்று நம்முடைய மத்திய கல்வித் துறை அமைச்சராக இருந்த திரு. நூருல் ஆசன் அவர்களும் நம்முடைய கல்வித் துறை அமைச்சர் அவர்களும் பேசியதாகவும், அவர்கள் ஒரு கமிட்டி வைத்து எந்த இடத்திலே சிலையை வைப்பது என்று அந்தக் கமிட்டி முடிவு சொல்லுவதற்கு முன்னாலேயே நம்முடைய அரசு வெளியிலே கொண்டுபோய் வைத்து விட்டது, ஆகவே, 3 ஆண்டுகளுக்கு முன்பு அவர்கள் செய்த தவறு அது என்பதைப் போலவும் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். அதனுடைய உண்மை என்ன என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்று ஒரு யோசனை வந்ததாகத் தெரியவில்லை. அப்படி வந்திருக்குமானால், நாம் அந்தக் குழுவை அமைத்து, அந்தக் குழுவின் மூலமாக நாம் வற்புறுத்தி இருப்போம். பல தடவை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் இந்த அவையிலே தெரிவித்திருக்கின்றார்கள். குறிப்பிட்ட ஒரு இடத்திலே வைப்பதன் காரணமாக எந்த ஒரு இழுக்கும் ஏற்படாது. மதுரை கோயிலிலே கூட திருமலை நாய்க்கன் சிலையை வைத்திருக்கிறார்கள். இராமேஸ்வரம் கோயிலிலே சேதுபதியினுடைய சிலைகள் எல்லாம் இருக்கின்றன. வேறு பல கோயில்களிலேயும் இருக்கின்றன என்றுகூட எடுத்துக் காட்டியிருக்கிறோம்.

(பிற்பகல் 4-20).

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: துணைத்தலைவர் அவர்களே, ஏதோ மத்திய அரசைப் புண்படுத்த வேண்டுமென்பதற்காக, மத்திய அரசின் அனுமதி கிடைக்காத காரணத்தால், அந்தச் சிலைகள் வைக்கப்பட்டிருக்கின்றன என்று எழுதப்பட்டிருப்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அப்படி எழுதப்பட்டிருப்பது உண்மைதான். மத்திய அரசைப் புண்படுத்துவதற்காக அல்ல, மாநில அரசின் நிலைமையை மக்களுக்கு உணர்த்துவதற்காக அது எழுதப்பட்டதேயல்லாமல், மத்திய அரசைப் புண்படுத்துவதற்காக எழுதப்பட்டதல்ல. இப்பொழுது கூட திரு பிரம்மானந்த ரெட்டி அவர்கள் வந்திருந்தபொழுது, அது பற்றிப் பேசுகின்ற வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது. எங்கள் இருவருக்குமிடையே ஏற்பட்ட உரையாடல்களுக்கிடையே ராஜ ராஜ

TRUTH ALONE TRIUMPHS

[1975 ஏப்ரல் 19

சோழன் சிலை பற்றிய உரையாடல்களும் நிகழ்ந்தன. அப்பொழுது நம்முடைய உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்களே இங்கே எடுத்துச் சொன்ன மாதிரி, புதிதாகக் கட்டப்பட்டிருக்கிற வராகி ஆலயத்தைப் பற்றியும் அதனுடைய புகைப் படங்களையும் திரு. பிரம்மானந்த ரெட்டி அவர்களிடத்தில் நான் எடுத்துக் காட்டினேன். அவர்களும் ஏதோ தவறு நடந்திருக்கிறது என்பதை ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களிடத்தில் அதிகாரிகள் வேறு விதமாகச் சொன்னாலும் கூட, நான் அதைப் பற்றி ஏற்கெனவே நிருபர்களிடம் எடுத்துச் சொன்னபோது, மத்திய சர்க்காருக்குத் தொடர்புடைய அங்கே இருக்கின்ற அதிகாரிகள் முதலமைச்சர் அவர்கள் சொன்னது தவறு, இது ஏற்கெனவே இருந்த ஆலயம் என்று எல்லாம் தவறான தகவல்களை பத்திரிகைகளுக்குக் கொடுத்தார்கள். ஆனால் திரு. பிரம்மானந்த ரெட்டி அவர்கள் என்னிடத்தில் பேசும்போது, அந்த அறிக்கைகள் தவறானவை என்கின்ற அளவுக்கு ஒத்துக்கொண்டு புதிதாகத்தான் அந்த ஆலயம் கட்டப்பட்டிருக்கிறது என்பதையும் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஏன் அதை நான் சொல்ல வந்தேன் என்றால், ராஜ ராஜ சோழனுடைய சிலையை அங்கே வைத்தால், அந்த ஆலயத்தினுடைய தொன்மை கெட்டுவிடும். ஆகவே புதிய சிலைக்கு அங்கே இடம் அளிக்கக்கூடாது என்பது தான் மத்திய சர்க்காருடைய வாதமாக இருந்து வந்தது. ஆனால் இப்பொழுது கட்டப்பட்டிருக்கின்ற புதிய ஆலயத்தின் காரணமாக தொன்மை கெடாதா என்பது தான் நம்முடைய கேள்வியாக இருந்தது. இந்த இரண்டு கேள்விகளுடைய நிலையை இப்பொழுது மத்திய சர்க்கார் உணர்ந்திருக்கிறது என்று தெரிகிறது. அந்த அடிப்படையிலே தான், திரு. பிரம்மானந்த ரெட்டி அவர்கள் நிருபர்களிடம் பேசுகிற சமயத்தில் கூட இது ஆராயப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் சொல்லி நாட்களாயிற்று. விரைவிலே ஆராய்ந்து ராஜராஜ சோழன் சிலையை உள்ளே வைப்பதற்கு அவர்கள் அனுமதி அளிப்பார்கள் என்று நம்புகின்றேன்.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, நான் இதை எடுத்துச் சொல்வதற்குக் காரணம் திரு. பிரம்மானந்த ரெட்டி அவர்கள் 17-3-1975ல் இதைச் சொல்லியிருக்கிறார்கள்.

"The Union Minister of Education Mr. Nurul Hassan and the State Minister for Education Mr. V.R. Nedunchezhiyan had a meeting in February 1972 when it was agreed that a small committee should be set up to go into the question of the location of the statue. The Committee was to consist of the Superintendent of Archaelogy, Southern Region, Madras, the Director of Archaelogy of the Tamil Nadu Government, and a Professor of History from one of the Universities in Tamil Nadu. Even before the Committee could meet, the statue was installed on the road outside the temple and unveiled by the State Government in April 1972."

1975 ஏப்ரல் 19]

இப்பொழுது நான் இதைச் சொல்வதற்குக் காரணம் மறுபடியும் கமிட்டியை நாம் போட்டால், உள்ளே கொண்டு வருவதற்கு அனுமதிப்பார்களா என்பதை அமைச்சரவர்கள் அறிவார்களா என்பதற்காக நான் குறிப்பிட்டேன. (சிரிப்பு).

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அவர்கள் குறிப்பிடுகிற மாதிரி, அதிகாரிகள் அளவிலே அது நடைபெற்று அவர்கள் ஒரு குறிப்பிட்ட இடத்தைக் காட்டினார்கள். இரண்டு கோபுரத்துக்கு இடையிலே வைக்கலாமென்று கூறினார்கள். அந்த இடத்திலே வைப்பதை விட வெளியே வைப்பது மேலானது என்ற அளவுக்குத்தான் நாம் அப்பொழுது முடிவுக்கு வந்தோம். ஆனால் அதிகாரிகள் மட்டத்தில் அது நடைபெற்றதா இல்லையா என்பது தெரியவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது மாதிரி, அந்தக் கமிட்டியை மறுபடியும் அமைப்பதன் மூலம் உள்ளே கொண்டு போக வழி இருக்குமானால், அந்தக் கமிட்டி மூலம் முயற்சி எடுப்பதற்கு முயலலாம்.

திரு எம். சங்கரலிங்கம் : கங்கை கொண்ட சோழபுரத்தில் அமைக்கப்பட்ட அந்தத் திருப்பணிக்குழு எந்தப் பணியை நிறைவேற்றுவதற்காக அமைக்கப்பட்டது? அந்தப் பணி நிறைவேற்றப்பட்டதா?

மாண்புமிகு திரு மு. கண்ணப்பன்: ராஜ ராஜசோழனுடைய சிலைக்கு ஏற்பட்ட நிலைதான் இந்தத் திருப்பணிக்குழுவுக்கும் ஏற்பட்டிருக்கிறது. மாண்புமிகுஉ றுப்பினரவர்கள் திருப்பணிக்குழு அமைக்கப்பட்டதன் நோக்கம்என்ன என்று கேட்டார். 1958–59-வது ஆண்டில் அந்தக் கோயிலில் மின்சார "ஒயரிங்" செய்யப்பட வேண்டுமென்பதற்காக அந்தக் குழு அமைக்கப்பட்டது. 1958–59-ல் இருந்து 1961–62 இரண்டு ஆண்டுகளுக்கும் நம்முடைய மாநில அரசு 15 ஆயிரம் ரூபாய், 10 ஆயிரம் ரூபாய் என்று சொல்லி ஆண்டு தோறும் பணம் ஒதுக்கியும்கூட, மத்திய தொல் பொருள் ஆராய்ச்சித் துறை அதற்கான சமாதானத்தைத் தெரிவித்த காரணத்தால், 1971-வது ஆண்டில் திருப்பணிக்குழு செயல்படவில்லை என்று சொல்லி, திருப்பணிக்குழு கலைக்கப்பட்டது. மீண்டும் முயற்சி எடுக்கவேண்டுமென்று 1971லே முயற்சி மேற்கொண்டு, மீண்டும் திருப்பணிக்குழு தீர்மானம் போட்டு, 16–6–1973 அன்றுதான் மத்திய தொல் பொருள் ஆராய்ச்சித் துறையினர் இதற்கான அனுமதியைத் தந்திருக்கிறார்கள். 1958லேயிருந்து 1973வது ஆண்டு வரை சுமார் 15 ஆண்டு காலத்துக்குப் பிறகு, பெரிய முயற்சிகள் எல்லாம் மேற்கொண்டதற்குப் பிறகு, இந்த அனுமதி கிடைக்கப்பெற்றிருக்கிறது. இப்பொழுது பொதுப்பணி இலாகாவினிடம் "ஒயரிங்" செய்கின்ற பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது. விரைவில் நிறைவேறும் என்று எதிர்பார்க்கிறோம்.